சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :OS:96/2019

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 08ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் ராஜேந்திரன் (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>**முதல் விசாரணை**</u>

08.01.2024

நான் இந்த வழக்கின் 2ம் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 10.11.2009 தேதியிட்ட 1ம் பிரதிவாதி, 1ம் வாதி பெயருக்கு பதிவு செய்து கொடுத்த பதிவு ஈடுகடன் பத்திரம் ஆவண எண்.3292/2009 அசல் வா.சா.ஆ1 ஆகும். 02.05.2019 தேதியிட்ட 1ம் வாதி, 1ம் பிரதிவாதிக்க அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ2 ஆகும்.03.05.2019 தேதியிட்ட 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அ ஞ்சலக ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ 3 ஆகும்.22.06.2020 தேதியிட்ட அசலுடன் ஒப்புகை செய்யப்பட்ட 1ம் வாதியின் இறப்புச்சான்றிதழ் நகல் வா.சா.ஆ 4 ஆகும்.அசலுடன் ஒப்புகை செய்யப்பட்ட 1ம் வாதியின் வாரிசு சான்றிதழ் நகல் வா.சா.ஆ 5 ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.